தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
செப்டம்பர் 5, 2016 இதழுடன் இணைப்பு

வாட்ஸ் அப் வாக்கு மீறலாமா?

புதிய தடத்தில் பேஸ்புக் இலவச இணைய இணைப்பு

என்ன நடக்கிறது இணையத்தில்?

விண்டோஸ் 10: அறிமுகத் திரைகளை அழகாக அமைக்க

~டாக்டர் பெ.சந்திர போஸ் ~

விண்டோஸ் 10 இயக்க முறைமை, இது வரை விண்டோஸ் இயக்கங்கள் தந்த அறிமுகத் திரைகளை (Lock and Sign in screens) புதுமுறையில் தந்துள்ளது. சிலர் இவை திரும்ப திரும்ப காட்டிய திரைகளையே காட்டி வருகின்றன. எனவே, இவற்றை நிறுத்தி விட்டேன் என்று கடிதங்களை அனுப்பியுள் ளனர். அவ்வாறு செயல்படத் தேவையே இல்லை. இவற்றை நாம் விரும்பும் வகையில் வடிவமைத்துக் கொள்ளலாம். அதற்கான வழிகளை இங்கு காண்போம்.

லாக் ஸ்கிரீனில் கார்டனா

சென்ற ஆகஸ்ட் 02ல் வெளியிட்ட விண்டோஸ் மேம்படுத்தலில், கார்டனா செயலியில் கூடுதல் வசதிகள் தரப்பட்டுள்ளன. இப்போது, கார்டனா உங்களுடைய தனிநபர் தகவல்களைப் படித்து, உங்கள் நிகழ்ச்சிகளுக் கான நாளை நிச்சயிக்கலாம். உங்கள் கம்ப்யூட் டரில் லாக் இன் செய்திடாமலேயே, இந்த செயல் பாடை மேற்கொள்ளலாம். லாக் ஸ்கிரீனில்,

உள்ளே

வாட்ஸ் அப் வாக்கு மீறலாமா?	பக்கம் 5
விண்டோஸ் 10: காட்டப்படாத வசதிகள்	பக்கம் 6
என்ன நடக்கிறது இணையத்தில்?	பக்கம் 8

வாசகர்களே....

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துகளை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளைக் குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2016 மார்ச் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக்கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிடவேண்டும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 39, ஓயிட்ஸ் ரோடு, இராயப் பேட்டை, சென்னை – 600 014
computermalar@dinamalar.in

கார்டனா செயலியை அமைத்திட, கீழே கொடுத்துள்ளபடி செயல்படவும். முதலில் கார்டனாவைச் செயல்படுத்தவும். பின்னர், Settings > Lock screen > Use Cortana even when my device is locked எனச் செல்லவும். இதன் மூலம், உங்கள் கம்ப்யூட்டர் லாக் செய்யப்பட்டிருக்கும்போதும், அடிப்படை செயல்களை (சீதோஷ்ண நிலை அறிதல் போன்றவை) மேற்கொள்ள முடியும். உங்களால் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட நிகழ்வுகளை அறிந்து தகவல் அளிக்கும் பணியினை கார்டனா மேற்கொள்ள வேண்டும் எனில், Let Cortana access my calendar, email, messages, and Power BI data when my device is locked என்பதன் அருகே உள்ள செக் பாக்ஸில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும்.

லாக் ஸ்கிரீன் பின்னணி

லாக் ஸ்கிரீனின் பின்புறத்தில் காட்சி எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் தீர்மானிக்கலாம். இதற்கு மூன்று ஆப்ஷன்கள் தரப்பட்டுள்ளன. முதலாவதாக, நீங்கள் தேர்ந்தெடுக்கும் படத்தை அமைக்கலாம். ஸ்லைட் ஷோ ஒன்றை உருவாக்கி பதியலாம். அல்லது, விண்டோஸ் ஸ்பாட் லைட் இயக்கலாம். மூன்றாவதாகத் தரப்பட்டதை இயக்கினால், பிங் தேடல் தளத்திலிருந்து, அதிக பிக்ஸெல் அடர்த்தி கொண்ட போட்டோக்கள் பெறப்பட்டு காட்டப்படும். நீங்கள் எந்த படத்தினை அதிகம் விரும்புகிறீர்கள் என ஸ்பாட் லைட் கணித்துக் கொண்டே இருக்கும். அதற்கேற்ப படங்கள் காட்டப்படும். ஏதேனும் ஒன்றை நீங்கள் விரும்பவில்லை என்றால், அதைப் போன்ற படங்கள் காட்டப்பட மாட்டாது.

ஸ்பாட் லைட் (Spotlight) செயலியை இயக்க, முதலில் செட்டிங்ஸ் மெனு செல்லவும். பின்னர், Personalization > Lock screen > Background என்று சென்று, Windows spotlight என்பதைத் தேர்ந்தெடுத்து இயக்கவும்.

லாக் ஸ்கிரீன் செயல்பட

எப்போதும் இயக்கத்தில் லாக் ஸ்கிரீனை வைத்திட, அதில் சில செயலிகளைப் பதிந்து வைக்கலாம். இந்த வகையில் எட்டு செயலிகளை இதில் இணைக்கலாம். நாம் திரையைப் பார்த்தவுடன், இந்த செயலி காட்டும் அப்போதைய தகவலைத் தெரிந்து கொள்ளலாம். Weather, Skype, Calendar, Mail, Store மற்றும் Xbox ஆகியவையே இந்த செயலிகள். இவற்றைத் தேர்ந்தெடுக்க, செட்டிங்ஸ் மெனு திறக்கவும். பின்னர், Personalization > Lock screen > Choose an app to show detailed status அல்லது Choose apps to show quick statuses என்று செல்லவும். இதன் பின்னர், கிளிக் செய்து குறிப்பிட்ட செயலியை அமைக்கலாம். அமைத்த பின்னர், ஏதேனும் ஒன்று தேவை இல்லை எனக் கருதினால், அதற்கான பாக்ஸில் கிளிக் செய்து, அதன் நிலையை None என அமைக்க வேண்டும். நம் கம்ப்யூட்டரில் பதிந்துள்ள அப்ளிகேஷன்களுக்கேற்ப, மேலே குறிப்பிட்ட செயலிகள் மாறுபடலாம்.

உள் நுழைவு திரைப் பின்னணி

விண்டோஸ் 10 முதலில் அறிமுகமான போது, விண்டோஸ் இலச்சினை கொண்ட, ஒளி வெள்ளம் காட்டும் திறக்கப்பட்ட ஜன்னல் கொண்ட, திரை காட்டப்பட்டது. தற்போது இது போய்விட்டது. இப்போது நாம் நம் யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்து நுழையும் திரையின் பின்னணியை மாற்ற இரு ஆப்ஷன்கள் தரப்பட்டுள்ளன. நிலையாக ஒரு வண்ணம் அல்லது லாக் ஸ்கிரீனில் காட்டப்படும் போட்டோ.

இந்த இரண்டு ஆப்ஷன்களுக்கிடையே மாற்றி மாற்றி செல்ல, முதலில் செட்டிங்ஸ் மெனு திறக்கவும். பின்னர், Personalization > Lock screen > Show lock screen background picture on the

sign-in screen எனச் செல்லவும். இந்த ஆப்ஷனை இயக்காமல் விட்டுவிட்டால், திரையில் நீங்கள் தேர்ந்தெடுத்த வண்ணம் இருக்கும். இதற்கான வண்ணத்தினைத் தேர்ந்தெடுக்க, Personalization > Colors என்று சென்று, உங்களுக்குப் பிடித்த வண்ணத்தினைத் தேர்ந்தெடுக்கலாம்.

மின் அஞ்சல் முகவரியை மறைக்க

தனி நபர் தகவல்கள் காட்டப்படாமல் இருக்க, விண்டோஸ் 10 அதற்கான மேம்படுத்தல் வழியை அண்மையில் தந்துள்ளது. நுழைவுத் திரையில், நம் பெயர், போட்டோ (அமைத்திருந்தால்) ஆகியவற்றுடன், நம் மின் அஞ்சல் முகவரியும் முன்பு காட்டப்பட்டு வந்தது. தற்போது தரப்பட்டுள்ள மேம்படுத்தலில், மாறா நிலையில், மின் அஞ்சல் முகவரி மறைக்கப்பட்டுள்ளது. இது காட்டப்பட வேண்டும் என்றாலும், காட்டப்படாமல் இருக்க வேண்டும் என்றாலும் அதற்கான வழி தரப்பட்டுள்ளது. செட்டிங்ஸ் மெனு சென்று, Accounts > Sign-in options > Privacy > Show account details (e.g. email address) on sign-in screen என்று செல்லவும்.

இரண்டிற்குமான வழிகள் இங்கு கிடைக்கும்.

அறிவிப்புகளை நிறுத்த

கம்ப்யூட்டர் லாக் செய்யப்பட்டிருக்கும் போது, அறிவிப்புகள் (Notifications) தேவை இல்லை என எண்ணி, அவற்றை நிறுத்த எண்ணினால், நிறுத்தலாம். இதற்கு செட்டிங்ஸ் மெனு சென்று, System > Notifications & actions > Show notifications on the lock screen காட்டவும் நிறுத்தவும் செய்திடலாம்.

பெர்சனல் கம்ப்யூட்டரிலிருந்து இணைய இணைப்பு

உங்கள் பெர்சனல் கம்ப்யூட்டர் வை பி இணைய இணைப்பு தரும் சாதனமாக மாற்றும் வசதி தற்போது கிடைத்துள்ளது. விண்டோஸ் 10 சிஸ்டம் மற்றும் அதன் ஆகஸ்ட் 2 அன்று வெளியிடப்பட்ட ஆண்டுவிழா மேம்படுத்தலை உங்கள் கம்ப்யூட்டர் மேற்கொண்டிருந்தால், இது எளிதாகிறது. ஏற்கனவே தரப்பட்டுள்ள விண்டோஸ் 7 மற்றும் 8 சிஸ்டங்களில் இந்த வசதி இருந்தாலும், விண்டோஸ் 10ல் இது மிக எளிதாக மாற்றப்பட்டுள்ளது. ஸ்விட்ச் ஒன்றை இயக்கி இதனை மேற்கொள்ளலாம்.

கம்ப்யூட்டர் வயர் வழியாகவும், அது இல்லாமலும் இணைய இணைப்பில் இருக்கலாம். இதற்குக் கீழ்க்கண்ட செயல்முறைகளை மேற்கொள்ளவும்.

1. விண்டோஸ் மற்றும் 'I' கீ அழுத்தி செட்டிங்ஸ் பிரிவைப் பெறவும். இதனை விண்டோஸ் கீ அழுத்தி அதில் கிடைக்கும் செட்டிங்ஸ் பிரிவில் அழுத்தியும் பெறலாம். இந்த செட்டிங்ஸ் பக்கத்தில் "Network & Internet" என்பதில் அழுத்தவும்.
2. இந்த Network & Internet பக்கத்தில், இடது பிரிவில் உள்ள "Mobile hotspot" என்பதில் கிளிக் செய்திடவும்.
3. வலது பிரிவில், "Share my Internet connection with other devices" என்ற ஸ்விட்ச் அழுத்தி இயக்கவும். மாறா நிலையில் உள்ள



நெட்வொர்க் இல்லாமல், வேறு ஒன்றிலிருந்து இணைப்பு வேண்டும் எனில், Edit என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.

4. எடிட் விண்டோவில், நீங்கள் இணைக்க விரும்பும் நெட்வொர்க் பெயரை டைப் செய்து அதற்கான பாஸ்வேர்டையும் கொடுக்கவும். அதன் ஓகே கிளிக் செய்திடவும்.
5. அவ்வளவு தான். விண்டோஸ் 10ல் இவ்வளவு போதும். உங்கள் பெர்சனல் கம்ப்யூட்டர் ஒரு வை பி ஹாட் ஸ்பாட் ஆக இயங்கும். விண்டோஸ் 10 ஆண்டுவிழா மேம்படுத்தலில் நமக்குத் தரப்பட்ட அருமையான வசதி இது. ஆனால், இது பற்றி மைக்ரோசாப்ட் அவ்வளவாக விளம்பரப்படுத்தவில்லை.

வாட்ஸ் அப் வாக்கு மீறலாமா?

வாட்ஸ் அப் செயலி தன் பயனாளர்களின் தொலைபேசி எண்களை பேஸ்புக் நிறுவனம் பயன்படுத்தக் கொடுக்க முடிவு எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 2014 ஆம் ஆண்டு, வாட்ஸ் அப் நிறுவனத்தை, பேஸ்புக் கையகப்படுத்தியபோதே, இந்த அச்சம் பலரின் மனதில் எழுந்தது. ஆனால், அப்போது, இரண்டு நிறுவனங்களும் தனித்தனியே தான் செயல்படும் என்றும், தங்கள் செயல்பாடுகளில் எந்தவித கூட்டும் இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கு நேர் மாறாக, இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த முக்கியமான மாற்றத்தினை மேற்கொள்வதற்காகவே, கடந்த நான்கு ஆண்டுகளாக, புதுப்பிக்கப்படாத தன்னுடைய நிபந்தனைகள் மற்றும் தனிநபர் குறித்த கொள்கைக் குறிப்பில் மாற்றங்களை வாட்ஸ் அப் கொண்டு வந்துள்ளது.

முதல் நிலையில், வாட்ஸ் அப் தன் பயனாளர்களின் தொலைபேசி எண்களை, பேஸ்புக் சிஸ்டங்களுடன் இணைக்க உள்ளது. இதனால், பேஸ்புக் தளத்தில், நமக்கு நண்பர்களைப் பரிந்துரை செய்திடுகையில், இன்னும் அதன் வட்டம் விரிவாகக் காட்டப்படும். மற்றும் நாம் தொடர்பில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் விற்பனைப் பொருட்கள் குறித்த விளம்பரங்கள் அதிகமாகக் காட்டப்படும்.

பேஸ்புக் ஏன் தன்னுடைய தொலைபேசி எண்ணைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணுபவர்களை, இந்த செயல் கோபப்பட வைக்கலாம். ஆனால், நம்முடைய தொலைபேசி எண்களை தளத்தில் காட்டப் போவதில்லை என்றும், விளம்பரதாரர்களுக்கு அவற்றை விற்பனை செய்திடப் போவதில்லை என்றும், வாட்ஸ் அப் தொடர்ந்து கூறி வருகிறது. இருந்தாலும், வாட்ஸ் அப் நம் தொலைபேசி எண்களை, வர்த்தக நிறுவனங்களுக்கு அளித்து, அந்த நிறுவனங்கள் நம்மைத் தனிப்பட்ட முறையில் அழைக்க இருப்பது உறுதி என அனைவரும் கருதுகின்றனர்.

வாட்ஸ் அப் நிறுவனம் இது பற்றிக் குறிப்பிடுகையில், இந்த மாற்றத்தினால், மக்களுக்கு முக்கிய அறிவிப்புகள் விரைவாக அவர்களின் தொலைபேசியின் மூலம் சென்றடையும். அவர்களின் வங்கிக் கணக்கில் ஏற்படும் திருட்டுத்தனமான பரிவர்த்தனை, பயணம் செல்ல இருக்கின்ற விமானப் பயணத்தில் ஏற்படும் தாமதம், வாங்கிய பொருள்களுக்கான ரசீது போன்ற தகவல்களை இதன் மூலம் பெறும் வாய்ப்புகள் உருவாகும். அத்துடன், பயனாளர்கள் தாங்கள் விரும்பும் பொருட்கள் குறித்தும் தகவல்களைத் தொடர்ந்து பெறுவார்கள்.

இது ஸ்பேம் செய்திகள் குவிவதற்கான வாய்ப்புகளைத் தரும். வாட்ஸ் அப் கூட இது குறித்து கருத்து தெரிவிக்கையில் தங்கள் பயனாளர்கள், ஸ்பேம் தகவல்களைப் பெறும் அனுபவத்தைப் பெறக் கூடாது என்று கூறியுள்ளது. அதனாலேயே, பேஸ்புக் செயலியுடன் தகவல்களைப் பங்கு கொள்வதிலிருந்து ஒவ்வொருவரும் தங்களை விலக்கிக் கொள்ளும் விருப்பத்திற்கு இடம் தரப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது. வாட்ஸ் அப் செயலியில், செட்டிங்ஸ்> அக்கவுண்ட் எனச் சென்று, பேஸ்புக் செயலியுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதிலிருந்து விலக்கு பெறும் விருப்பத்தினைத் தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை வாட்ஸ் அப் வரும் இரண்டு மாதங்களுக்குக் கண்காணித்திடத் திட்டமிட்டுள்ளது. எனவே, அதுவரை பயனாளர்களின் தகவல் பரிமாற்றங்கள் பாதுகாப்பாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

விண்டோஸ் 10: காட்டப்படாத வசதிகள்

~ பாரதி ~

விண்டோஸ் 7 சிஸ்டம் தொடங்கி, மைக்ரோசாப்ட் வழக்கம் போல் இல்லாமல், பல புதிய வசதிகளைத் தந்து வருகிறது. விண்டோஸ் இயக்கத்தினைப் பயன்படுத்தும் பெரும்பாலானவர்கள், இவற்றை முழுமையாக அறிந்து பயன்படுத்துவதில்லை. தற்போது வந்திருக்கும் விண்டோஸ் 10 மற்றும் அதன் அண்மைக் காலத்திய மேம்பாடு, எண்ணற்ற பல வசதிகளை இணைத்துள்ளது. நாம் அன்றாட இயக்கத்திற்கான அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துகிறோம். இது போன்ற கூடுதல் வசதிகளைப் பயன்படுத்துவதில்லை. ஏனென்றால், இந்த வசதிகள் மறைக்கப்பட்டே உள்ளன. மேலும், இந்த வசதிகள் குறித்து டாகுமெண்ட்களிலும் குறிப்பிடப்படவில்லை. விண்டோஸ் 10ல், நாம் விரும்பிப் பயன்படுத்தக் கூடிய, மறைக்கப்பட்ட வசதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கு காணலாம்.

ரகசிய ஸ்டார்ட் மெனு

நீங்கள் விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு முன்பு தரப்பட்ட, டைல்ஸ்கள் இல்லாத ஸ்டார்ட் மெனுவினை விரும்புகிறீர்களா? விண்டோஸ் கீயில் ரைட் கிளிக் செய்தால், உடன் ஒரு மெனு பாப் ஆப் ஆகும். இதில் சிஸ்டத்தில் நாம் இயக்க விரும்பும் அனைத்திற்கும் பிரிவுகள் கிடைக்கும். இதில் தேவையானதில் கிளிக் செய்து, பழைய ஸ்டார்ட் மெனு போல, டைல்ஸ் எதுவுமின்றி செயலிகளைப் பெறலாம். எடுத்துக் காட்டாக, Programs and Features, Search, Run ஆகிய பிரிவுகளைக் கூறலாம். மொத்தம் 18 பிரிவுகள் மெனுவில் தரப்படுகின்றன. சுற்றி வளைத்துச் செல்லாமல், இந்த பிரிவில் உள்ள செயலிகளை விரைவாக இயக்கலாம்.

மறைமுக டெஸ்க்டாப் பட்டன்

நாம் கம்ப்யூட்டரை இயக்குகையில், பல முறை டெஸ்க் டாப்பில் நாம் வைத்துள்ள பைல்களைப் பார்க்க விரும்புவோம். விண்டோஸ் 7 வந்த காலத்தில், டெஸ்க்டாப் திரையை உடனே பெற, டாஸ்க் பாரின் வலது மூலையில், ஒரு இடம் தரப்பட்டது. இதில் கிளிக் செய்தால், உடன் அப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் செயலிகளுக்கான திரைகள் அனைத்தும் சுருக்கப்பட்டு, டெஸ்க்டாப் காட்சியளிக்கும். மீண்டும் அதே, இடத்தில் கிளிக் செய்தால், செயல்பட்டுக் கொண்டிருந்த செயலிகளுக்கான விண்டோக்கள் கிடைக்கும்.

இந்த வசதி விண்டோஸ் 10லும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், டெஸ்க்டாப்பிற்கான இடத்தில், கண்ணுக்குப் புலப்படாத பட்டன் ஒன்று தரப்பட்டுள்ளது. முக்கோண வடிவத்தில் சிறு சிறு புள்ளிகள் கொண்டதாக இது உள்ளது. இதில் கர்சரைக் கொண்டு சென்று கிளிக் செய்தால், டெஸ்க்டாப் கிடைக்கிறது. மீண்டும் அதே இடத்தில் கிளிக் செய்தால், செயல்பட்டுக் கொண்டிருந்த செயலிகள் கொண்ட விண்டோ கிடைக்கும். இதன் செயல்பாட்டைக் கூட மாற்றலாம். இதில் கிளிக் செய்திட வேண்டுமா? அல்லது, கர்சரைக் கொண்டு சென்றால், டெஸ்க்டாப் பெறுவதற்கான மெனு தோன்ற வேண்டுமா? என Settings சென்று மாற்றலாம்.

கீ போர்ட் மூலம் திரையைச் சுழற்ற

இந்த வசதியைப் பலர் பயன்படுத்த மாட்டார்கள். இருப்பினும், வேடிக்கை காட்ட இந்த ட்ரிக் பயன்படும். திரைக் காட்சியை நாம் விரும்பும் பக்கம் சுழல வைக்கலாம். Ctrl + Alt + D ஆகிய கீகளை மொத்தமாக அழுத்திக் கொண்டு, எந்த பக்கம் திரை சுழல வேண்டுமோ, அதற்கான அம்புக் குறி கீயினை அழுத்தினால், அந்தத் திசையில் சுழலும். கீழ் நோக்கிய அம்புக் குறியை அழுத்தினால், தலைகீழாக திரை மாறும். இடது வலது அம்புக் குறி கீகளை அழுத்தினால், 90 கோணத்தில் திரை சுழலும். ஒன்றுக்கு மேற்பட்ட டெஸ்க்டாப் டிஸ்பிளே வைத்திருந்தால், குறிப்பிட்ட ஒரு டிஸ்பிளேயில்



மட்டுமே இதில் செயல்படும்.

மாறாக, டெஸ்க்டாப் பின்னணியில், ரைட் கிளிக் செய்து, Graphics Options > Rotation எனச் சென்று இயக்கலாம். இந்த வசதி விண்டோஸ் 7 சிஸ்டத்திலும் உண்டு.

புது வகை ஷட் டவுண்

இந்த ட்ரிக் விண்டோஸ் 10ல் மட்டுமே இயங்குகிறது. இது கொஞ்சம் சிக்கலான ட்ரிக். எனவே, செயல்படுத்திப் பார்க்க விரும்பு வர்கள், சற்று கவனமாகச் செயல்பட வேண்டும். இல்லை எனில், எதற்கும் இருக்கட்டும் என்று தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். டெஸ்க் டாப்பில், ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில், New > Shortcut என்று கிளிக் செய்திடவும். இங்கு கிடைக்கும் பாப் அப் விண்டோவில், கீழே கொடுக்கப்பட் டிருக்கும் கட்டளை வரியை காப்பி செய்து ஒட்டவும். %windir%\System32\SlideToShutDown.exe

இது உங்கள் டெஸ்க்டாப்பில், கிளிக் செய்து செயல்படுத்தக் கூடிய ஐகான் ஒன்றை உருவாக்கும். இதனை ஏதேனும் ஒரு பெயர் கொடுத்து சேவ் செய்து கொள்ளுங்கள். இந்த ஐகான் மூலம் நாம் சிஸ்டத்தினை ஷட் டவுண் செய்திடலாம். இந்த ஐகானில், டபுள் கிளிக் செய்தால், இழுத்துச் செல்லக் கூடிய ஷேட் ஒன்றை உருவாக்கும். பின்னர், மவுஸ் கொண்டு அதனை அப்படியே இழுத்து திரையின் கீழ் பகுதியில் விடவும். சிஸ்டம் ஷட் டவுண் செய் யப்படும். வேறு ஸ்லீப், ஹைபர்னேட் போன்ற ஆப்ஷன்கள் இதில் இருக்காது. ஷட் டவுண் செயல்பாடு மட்டுமே கிடைக்கும்.

டைல்ஸ் ரைட் கிளிக்

விண்டோஸ் 10ல் டைல்ஸ்களை எளி தாக இயக்கி வைக்கலாம். நம் விருப்பத்திற் கேற்ப மாற்றி அமைக்கலாம். மாற்றி அமைக்க விரும்பும் டைல் மீது, ரைட் கிளிக் செய்தி டவும். இங்கு ஒரு பாப் அப் மெனு கிடைக்கும். இங்கு உங்களுக்குப் பல்வேறு ஆப்ஷன்கள் தரப்படும். குறிப்பிட்ட அந்த டைலை, ஸ்டார்ட் மெனுவில் இருந்தே எடுக்கலாம். தொடர்ந்து இயங்கும் டைலாக இருந்தால், அதன் இயக்கத் தினை நிறுத்தி வைக்கலாம். டைலின் அளவை மாற்றி அமைக்கலாம். அதே போல, டாஸ்க் பாரில் ரைட் கிளிக் செய்தால், பல செயலிகளின் இயக்கத்தை உடனே மேற்கொள்ளும் வகையில் பிரிவுகள் நமக்குக் காட்டப்படும்.

அசைத்து இயக்குதல்

விண்டோஸ் 7 சிஸ்டத்திலிருந்தே இந்த வசதி தரப்பட்டது என்றாலும், பலர் இதனை அறிந்து பயன்படுத்துவதில்லை. பல விண்டோக்கள் திறந்திருக்கும் நிலையில், நீங்கள் பயன்படுத்தும் விண்டோவின் மேல் பகுதியில், கர்சரைக் கொண்டு சென்று, அழுத்தியவாறு அசைத்தால், மற்ற அனைத்து விண்டோக்களும் மினிமைஸ் செய்யப்படும். மீண்டும் அசைத்தால், அனைத்து விண்டோக்களும் திறக்கப்பட்டு கிடைக்கும்.

விண்டோவை இழுத்துப் 'பின்' செய்தல்

இந்த வசதியும் விண்டோஸ் 7 முதல் தரப்பட் டாலும், விண்டோஸ் 10ல் இது சற்று கூடுதல் வசதிகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு விண் டோவினையும், மவுஸால் அழுத்திப் பிடித்து, அதன் ஓர் ஓரத்திற்கு இழுத்தால், அது பாதியாகச் சுருங்கி நிற்கும். விண்டோஸ் 10ல், அந்த அரை விண்டோவினை பிடித்து இழுத்தால், 'கால்' அளவில் சுருங்கி நிற்கும். நிறைய விண்டோக் களைத் திறந்து செயல்பட்டுக் கொண்டிருந்தால், இந்த வசதியின் மூலம், அனைத்தையும் சுருக்கி, நம் கண் முன் வைத்துக் கொண்டு செயல் படலாம்.

மேலே சொல்லப்பட்டவை அனைத்தும் விண்டோஸ் 10 சிஸ்டத்தின் பல அமைப்பு வச திகளில் சிலவாகும். பயனாளர்கள் தேடினால், இன்னும் பலவற்றைப் பெறலாம்.

என்ன நடக்கிறது இணையத்தில்?

இணையத்தைச் சுற்றி இந்த உலகு சுற்றி வருகிறது. இந்த உலகத்தை இணையம் சுற்றச் செய்கிறது என, இணையத்தைக் கண்காணித்து வரும் கணிப்பாளர்கள் இருவகையாகக் கூறி வருகின்றனர். இரண்டுமே உண்மை. இணையத்தில் ஒரு நிமிடத்தில் என்ன நடக்கிறது என்று சில தகவல்கள் வந்துள்ளன.

ஒரு நிமிடத்தில், இணையம் வழி 20.4 கோடி மின் அஞ்சல்கள் செல்கின்றன. இவற்றில், 70% அஞ்சல்கள், 'ஸ்பேம் மெயில்கள்' என்று சொல்லப்படும், தேவையற்ற, குப்பை மெயில்கள் தாம்.

முதல் மின் அஞ்சல், 1971 ஆம் ஆண்டு, Ray Tomlinson என்பவரால் அனுப்பப்பட்டது. அவர் தனக்குத்தானே அதனை அனுப்பிக் கொண்டார். முதல் ஸ்பேம் மெயில், 1978ல், ARPNET என்பதன் மூலம் அனுப்பப்பட்டது. இதனை அனுப்பியவர் Gary Thuerk. ஒரு மின் அஞ்சலை அனுப்ப, 200 கோடி எலக்ட்ரான்கள் தேவைப்படுகின்றன.

இன்று ஒரு நிமிடத்தில், இணையத்தில், 5,27,760 படங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. 6,39,800 கிகா பிட்ஸ் அளவிலான தகவல்கள் பன்னாட்டளவில் இணையம் வழியே செல்கின்றன. விக்கிபீடியாவில், 6 புதிய கட்டுரைகள் பதிவாகின்றன. ஸ்கைப் தளம் வழியாக, 1,04,300 அழைப்புகள் செல்கின்றன.

பேஸ்புக் தளத்தில், ஒரு நிமிடத்தில், 7,01,389 பேர் புதியதாக லாக் இன் செய்கின்றனர். வாட்ஸ் அப் வழியாக 2 கோடியே 8 லட்சம் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. 27 லட்சத்து 80 ஆயிரம் பேர் யு ட்யூப்பில் விடியோ பார்க்கின்றனர். கூகுள் தேடல் இஞ்சினில் 24 லட்சம் தேடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு கேள்விக்குப் பதில் தெரிய, 0.2 விநாடிகளில், 1000 கம்ப்யூட்டர் சர்வர்கள் அலசப்படுகின்றன. ட்விட்டரில், 3,47,222 புதிய தகவல்கள் பதியப்படுகின்றன. அமேஸான் தளத்தில், 2,03,596 டாலர் மதிப்பில் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு லட்சத்திற்கும் மேலான டாட் காம் தளங்கள் ஒவ்வொரு நாளும் புதியதாகப் பதியப்படுகின்றன. முதன் முதலில் பதியப்பட்ட தளத்தின் பெயர் symbolics.com. யு ட்யூப் தளத்தில், முதன் முதலில் அப்லோட் செய்யப்பட்டது "Me at the zoo என்ற விடியோ படம். இது நடந்தது ஏப்ரல் 23, 2005.

இணையத்தில் உலா வருவதை, ஆங்கிலத்தில் "surfing" என முதலில் அழைத்தவர், நியூயார்க் நகரில் நூலகராகப் பணி புரிந்த Jean Armour Polly என்பவராவார்.

இணையத்தில் அதிக உலா வருபவை மனிதர்கள் அல்ல. கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களும், தானாக இயங்கும் இணைய ரோபோக்களும் தான் அதிகம் உலா வருகின்றன. இணைய ரோபோக்கள் என்பவை Internet Bot எனவும் அழைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட செயல்பாட்டினை மீண்டும் மீண்டும் செயல்படுத்தும் சாப்ட்வேர் புரோகிராம்களே இவை. மனிதனால் கம்ப்யூட்டரில், இணையத்தில் செயல்படுத்த முடியாததை இவை எளிதாக செயல்படுத்துகின்றன. இவைதான் அதிகமாக இணையத்தில் உலா வருகின்றன. அடுத்ததாக, மால்வேர் புரோகிராம்களாகும். இவை, நாள் ஒன்றுக்கு சராசரியாக 30,000 இணைய தளங்களைக் கைப்பற்றுகின்றன.

இந்த ஆண்டின் முடிவிற்குள், உலக அளவில், இணையத்தினைப் பயன்படுத்துபவர்கள் 320 கோடி பேர் ஆக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உலக மக்கள் தொகையில், 44% ஆகும். சீனா, இந்தியா மற்றும் இந்தோனேஷியா நாடுகள் தான், இணையத்தைப் பயன்படுத்துவதில் முன்னணியில் உள்ளன (பார்க்க: https://www.idc.com/getdoc.jsp?containerId= prUS40855515)

இணையம் உலக மக்களை இணைக்கும் அதே வேளையில், பலரை மன நோயாளிகளாகவும் மாற்றி உள்ளது. இன்று கூட, இணைய இணைப்பு துண்டிக்கப்பட்டால், உடனே பதற்றம் அடையும் மக்கள் நிறைய உள்ளனர். தன் வசம் இணையம் எப்போதும் இருக்க வேண்டும் என அதனைத் தன் மனைவி அல்லது கணவன் இடத்தில் வைத்திருக்கும் நபர்கள் பலர். இந்த வகையில், சீனாவில் இணையம் பயன்படுத்துவோரில், 40% பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மனநல மையங்களையும் சீனா இயக்கி வருகிறது.

கம்ப்யூட்டருக்குப் புதியவரா!

பிரவுசரைப் பாதுகாக்கும் வழிகள்

அன்றாட இணையப் பயன்பாட்டிற்கான அடிப்படைத் தேவை, இணையத்தை நம் கம்ப்யூட்டருடன், ஸ்மார்ட் போனுடன் இணைக்கும் பிரவுசர்கள் தாம். அனைத்து பிரவுசர்களும் இலவசமாக நமக்குக் கிடைத்தாலும், இவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும். நம் கம்ப்யூட்டரை, அதில் உள்ள நம் தனிநபர் தகவல்களைக் கைப்பற்ற முயற்சிக்கும் மால்வேர் மற்றும் வைரஸ் புரோகிராம்கள், பிரவுசர்களின் இயக்கத்தையும் முடக்கி வைத்திட முயற்சிக்கின்றன. இவற்றிலிருந்து பிரவுசரைக் காப்பாற்ற நாம் பல முன்னேற்பாடான முயற்சிகளை எடுக்கலாம். அவை குறித்து இங்கு காண்போம்.

1. **பிரவுசரை மேம்படுத்தல் அவசியம்:** உங்கள் கம்ப்யூட்டரில் பயன்படுத்தப்படும் பிரவுசர் செயலிக்கு மேம்படுத்தப்படும் பைல்களை, பிரவுசர் வழங்கிய நிறுவனம் அனுப்பினால், அவற்றை உடனடியாகத் தரவிறக்கம் செய்து, பிரவுசரை மேம்படுத்தவும். கூடுமானவரை, மேம்படுத்துதலை பிரவுசர் தானாக மேற்கொள்ளும் வகையில் "automatic updates" என்பதனைச் செயல்படுத்தியே வைக்கவும். எடுத்துக் காட்டாக, பலர் மைக்ரோசாப்ட் நிறுவனம் வழங்கிய பழைய இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பினையே பயன்படுத்தி வருவார்கள். அல்லது விண்டோஸ் செயல்பாட்டில் இயங்கும் பழைய ஆப்பிள் சபாரியைப் பயன்படுத்துவார்கள். இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். கூகுள் குரோம் அல்லது மொஸில்லாவின் பயர்பாக்ஸ் பிரவுசரைத் தானாக அப்டேட் செய்திடும் வகையில் செட்டிங்ஸ் மேற்கொண்டு அமைக்கவும். புதிய விண்டோஸ் சிஸ்டத்திற்கு மாறினால், அதற்கேற்ற புதிய இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பினைப் பயன்படுத்தவும். விண்டோஸ் 10 சிஸ்டத்திற்குக் கம்ப்யூட்டரை அப்கிரேட் செய்திருந்தால், எட்ஜ் பிரவுசரையே பயன்படுத்தவும். விண்டோஸ் 7, 8 மற்றும் 8.1 இவற்றில் ஒன்றைப் பயன்படுத்தினால், அதற்கேற்ற பிரவுசரை இன்ஸ்டால் செய்து பயன்படுத்தவும்.

2. **கிளிக் டு ப்ளே ப்ளக் இன் புரோகிராம்கள்:** உங்கள் இணைய பிரவுசரில் பல ப்ளக் இன் புரோகிராம்கள் கிளிக் செய்து இயக்கும் வகையில் தரப்பட்டிருக்கும். இவற்றை நீங்கள் இயக்கி வைக்க வேண்டும். இதனால், இணைய தளங்கள் வேகமாக உங்கள் கம்ப்யூட்டருக்கு இறக்கம் செய்யப்படும். இதனால், சி.பி.யு.விற்கு அதிக வேலைப்பளு இருக்காது. லேப்டாப் கம்ப்யூட்டர் எனில், அதன் பேட்டரி பவர் மிச்சப்படும். அது மட்டுமின்றி, இவை பாதுகாப்பு தரும் வழிகளாகவும் இயங்கும். உங்கள் பிரவுசரின் பின்னணியில், ப்ளக் இன் புரோகிராம்கள் செயல்பட்டால், ஹேக்கர்கள், பிரவுசரின் பிழைக் குறியீடுகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்த முடியாது.

3. **தேவையற்ற ப்ளக் இன் புரோகிராம்கள்:** உங்கள் இணைய பிரவுசரைப் பாதுகாப்பாக வைத்திருக்க, உங்களுக்குத் தேவையற்ற ப்ளக் இன் புரோகிராம்களை, கம்ப்யூட்டரிலிருந்து நீக்கிவிடவும். இதற்கு, பிரவுசரில் பதிந்து வைக்கப்பட்டுள்ள ப்ளக் இன் புரோகிராம் பட்டியலைப் பெற்று, தேவையற்றவற்றை அழித்துவிடலாம். இவற்றில் ஜாவா புரோகிராம்கள் மிகவும் ஆபத்தானவை. எனவே, அவை தேவை இல்லை எனில், முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். மைக்ரோசாப்ட் நிறுவனம் வழங்கிய 'சில்வர்லைட்' போன்ற புரோகிராம்கள் தேவையற்றவையாய் மாறிவிட்டன. எனவே இவற்றை நீக்கிவிடலாம். அதே போல, ப்ளாஷ் புரோகிராம் தேவை இல்லை எனில், நீக்கிவிடலாம். இதனால், பிரவுசர் செயல்பாடு பாதிக்குமோ என்ற கவலை வேண்டாம். எப்போது வேண்டுமானாலும், கட்டாயமாகத் தேவைப்படும் நிலையில், மீண்டும் இன்ஸ்டால் செய்து கொள்ளலாம்.

4. **ப்ளக் இன் புரோகிராமினை மேம்படுத்தவும்:** குறிப்பிட்ட ப்ளக் இன் புரோகிராம்களை மட்டும் வைத்துக் கொள்வது குறித்து மேலே பார்த்தோம். நமக்குத் தேவையான ப்ளக் இன் புரோகிராம்களை மட்டும் வைத்துக் கொள்ளும் சூழ்நிலையில், அவற்றை அவ்வப்போது மேம்படுத்திக் கொண்டே

இருக்க வேண்டும். அடோப் நிறுவனத்தின், ப்ளாஷ் ப்ளேயரை நீங்கள் பதிந்து வைத்துப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், அது தானாகவே அப்டேட் செய்திடும் வகையில் அமைத்துக் கொள்ளவும். கூகுள் குரோம் பிரவுசர், தனக்கென ப்ளாஷ் செயலியை அமைத்துக் கொண்டு வழங்கி வருகிறது. தானாகவே, அதனைப் புதுப்பித்தும் வருகிறது. விண்டோஸ் 10ல் இயங்கும் எட்ஜ் பிரவுசரும் தனக்கென ப்ளாஷ் பிளேயரைக் கொண்டுள்ளது. ஆனால், அதனை நாம் தான் தானாக அப்டேட் செய்து கொள்ளும் வகையில் அமைக்க வேண்டும். அதே போல், நாம் பயன்படுத்தும் அனைத்து ப்ளக் இன் புரோகிராம்களும், தாமாக அப்டேட் செய்திடும் வகையில் அமைக்க வேண்டும்.

5. **64 பிட் பிரவுசரைப் பயன்படுத்தவும்:** பிரவுசர்களில், 64 பிட் அளவில் இயங்கும் பிரவுசர்கள், வைரஸ் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு தரும் வகையில் இயங்கும் தன்மை கொண்டவையாய் உள்ளன. நீங்கள் 64 பிட் ஆப்பரேட்டிங் சிஸ்டம் பயன்படுத்துபவராக இருந்தால், 64 பிட் பிரவுசர் தான் உங்கள் கம்ப்யூட்டரில் இயங்கிக் கொண்டிருக்கும். கூகுள் குரோம் பிரவுசர் 32 மற்றும் 64 பிட் அளவில் இயங்கும் வகையில் கிடைக்கிறது. ஆனால், பலர் 32 பிட் பிரவுசரையே பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இவர்கள், 64 பிட் பிரவுசருக்கு மாறிக் கொள்வது நல்லது. பயர்பாக்ஸ் பிரவுசரைப் பொறுத்த வரை, நிலையாக எந்தச் சிக்கலும் இன்றி செயல்படும் வகையில், 64 பிட் பிரவுசர் பதிப்பு இல்லை. ஆனால், சோதனை முறைப் பதிப்பு கிடைக்கிறது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் எட்ஜ் பிரவுசர் 64 பிட் அமைப்பிலேயே செயல்படும் வகையில் உள்ளது. அதே போல, 64 பிட் பதிப்புகளாகக் கிடைக்கும் மேக் மற்றும் லினக்ஸ் சிஸ்டங்களில் இயங்கும் இணைய பிரவுசர்கள் அனைத்தும் 64 பிட் பிரவுசர்களாகவே உள்ளன.

6. **ஆண்ட்டி எக்ஸ்ப்ளாய்ட் புரோகிராம்:** இந்த வகை புரோகிராம்கள், பிரவுசருக்கான பாதுகாப்பினை வழங்குகின்றன. இவை ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்கள் அல்ல. பிரபலமான சாப்ட்வேர் புரோகிராம்கள், பல லட்சக் கணக்கில் குறியீடு வரிகளைக் கொண்டிருக்கும். இவற்றில் சில பிழையான குறியீடுகளைக் கண்டறிந்து ஹேக்கர்கள் தங்களுடைய வைரஸ் அல்லது மால்வேர் புரோகிராம்களை அனுப்புகின்றனர். இவற்றைப் பெற்ற சில புரோகிராம்கள், வைரஸ் தாக்குதலினால், வழக்கமான செயல்பாட்டிற்கு மாறாகச் செயல்படுகையில், ஆண்ட்டி எக்ஸ்ப்ளாய்ட் புரோகிராம், அதனைப் புரிந்து கொண்டு பிரவுசருக்கு நான்கு அடுக்கு பாதுகாப்பு தருகின்றன. வைரஸ்களை அழிப்பதில் இது ஈடுபடாது. இத்தகைய புரோகிராம் ஒன்றை இன்ஸ்டால் செய்து இயக்கி வைப்பது பிரவுசர் பாதுகாப்பிற்கு நல்லது. இந்த வகையில் Malwarebytes Anti-Exploit என்ற ஆண்டி எக்ஸ்ப்ளாய்ட் புரோகிராம் சிறப்பாகச் செயல்படுகிறது. இதனைப் பெற https://www.malwarebytes.org/antiexploit/ என்ற முக வரியில் உள்ள இணைய தளம் செல்லவும். இந்த புரோகிராம் முற்றிலும் இலவசமே. ஏன் இதற்குப் பதிலாக ஆண்ட்டி வைரஸ் புரோகிராமினைப் பயன்படுத்தக் கூடாது? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். நாம் எப்போதும் ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்களில் செயல்பாட்டில் நம்பிக்கை வைத்து செயல்பட முடியாது. சாப்ட்வேர் புரோகிராம்களில் உள்ள பிழைக்குறியீடுகளைப் பயன்படுத்த முடியாத வகையில் இந்த ஆண்ட்டி எக்ஸ்ப்ளாய்ட் புரோகிராம்கள் பாதுகாப்பு தருவது நல்லதுதானே.

7. **பிரவுசர் எக்ஸ்டன்ஷன்கள்:** பிரவுசர்களில், கூடுதல் வசதி தரும் வகையில் நீட்சியாக சில செயலிகள் தரப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், இணையத்தில் செயல்பாடு மிகவும் எளிதாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்படும். ஆனால், இவற்றைப் பயன்படுத்துவதில் நாம் அதிகக் கவனம் கொள்ள வேண்டும். சில கெடுதல் விளைவிக்கும் எக்ஸ்டன்ஷன் புரோகிராம்கள், விளம்பரங்களை நாம் பயன்படுத்தும் இணைய தளங்களில் இடைச் செருகி, நாம் அழுத்தும் கீகளை அப்படியே பெற்று, இந்த மோசமான எக்ஸ்டன்ஷன் புரோகிராம்களைத் தயாரித்து அனுப்பிய வருக்கு அனுப்பி வைக்கும். இதன் மூலம் நம் தனிப்பட்ட வகை தகவல்கள் திருடப்பட்டு நமக்கு, நிதி இழப்பு ஏற்படலாம். எனவே, நமக்குத் தேவையான எக்ஸ்டன்ஷன் புரோகிராம்களை மட்டும் பயன்படுத்தவும். எக்ஸ்டன்ஷன் புரோகிராம்களை மதிப்பிட்டு அவை நல்லவை தானா என்று அறிந்து பயன்படுத்துவது நன்மை தரும்.

8. **மோசமான தளங்கள்:** பிரவுசரின் பாதுகாப்பிற்கு மேலே கூறப்பட்ட வழிகளை நாம் பின்பற்றினாலும், நம்மை சிக்கலில் சிக்க வைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட மோசமான தளங்களை, இணையத்தில் சென்று பார்ப்பதையும் தவிர்க்க வேண்டும். பல இணைய தளங்கள் மோசமான சாப்ட்வேர் சங்கதிகள், படங்கள் மற்றும் தகவல்களைத் தர விறக்கம் செய்திட நம்மைத் தூண்டும். அவை மிக அபாயமான விளைவுகளை நம் கம்ப்யூட்டரில் ஏற்படுத்தும் புரோகிராம்களாக இருக்கும். எனவே, இது போன்ற தளங்களை அணுகிப் பார்க்கும் ஆசையை அறவே ஒழித்திட வேண்டும்.

புதிய தடத்தில் பேஸ்புக் இலவச இணைய இணைப்பு

பேஸ்புக் நிறுவனம், இந்திய ரயில்வேயுடன் இணைந்து, ரயில்வே ஸ்டேஷனைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு இலவச வை பி வழங்கும் திட்டம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக, ரயில்டெல் நிறுவனத் தலைவர் பஹ்குணா தெரிவித்துள்ளார். ஏற்கனவே 'இன்டர்நெட் பேசிக்ஸ்' என்னும் திட்டத்தை அமல்படுத்திய பேஸ்புக், அரசு தடை விதித்ததை அடுத்து அதனை முடக்கிக் கொண்டது. அதே போல, 'எக்ஸ்பிரஸ் வை பி' என்ற திட்டத்தினை, இணைய சேவை தரும் நிறுவனங்களுடன் இணைந்து இயக்க பேஸ்புக் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இன்னும் பலனளிக்கவில்லை. தற்போது, கூகுள் நிறுவனத்தின் திட்டத்தினைப் பின்பற்றி, புதிய கோணத்தில், இலவச வை பி இணைப்பினை இரயில்வே மூலம் தரும் திட்டம் குறித்து ஆலோசனை நடத்தி வருகிறது.

கூகுள், இந்திய ரயில்வேயின் ரெயில்டெல் (RailTel) நிறுவனத்துடன் இணைந்து, ரயில்வே ஸ்டேஷன்களில், இலவச இணைப்பை வழங்கும் திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது. இதுவரை 23 ரயில் நிலையங்களில் வெற்றிகரமாக இலவச வை பி இணைப்பினை வழங்கி வருகிறது. 2017க்குள், மொத்தம் 400 ரயில் நிலையங்களில் இந்த திட்டம் அமல்படுத்தப்படும். இரயில் நிலையங்களுக்கு வரும் பயணிகள் இந்த திட்டத்தினால், அதிகம் பயன் பெறுகின்றனர். குறிப்பாக தினந்தோறும் ரயில் மார்க்கமாகத் தங்கள் வர்த்தகத்திற்கெனச் சென்று வரும் வர்த்தகர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக உள்ளது. டிஜிட்டல் இந்தியாவாக உருவாகும் இந்தியாவில், கூகுள் மட்டுமே தனி ஒரு நிறுவனமாக ஆளுமை பெற்றிடக் கூடாது என்பதில் பேஸ்புக் குறியாக உள்ளது.

பேஸ்புக் தந்துள்ள திட்டத்தின்படி, சிறிய அளவில் இயங்கும் ரயில்வே ஸ்டேஷன்கள் வழியாக இலவச வை பி வழங்கப்படும். சிறிய ரயில்வே ஸ்டேஷன் ஒன்றில் வழங்கப்படும் இலவச வை பி, 10 கி.மீ. தொலைவில் அதனைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு வழங்கப்படும். இது காலப் போக்கில், 25 கி.மீ. தொலைவில் வாழும் மக்களுக்கு விரிவு படுத்தப்படும். இந்த வகையில் தான், கூகுள் தரும் இலவச வை பி திட்டத்திலிருந்து, பேஸ்புக் திட்டம் வேறுபடுகிறது. பேஸ்புக் கிராம மக்களை இலக்காகக் கொண்டு செயல்படத் திட்டமிடுகிறது. பேஸ்புக் நிறுவனத்தின் "எக்ஸ்பிரஸ் வை பி" திட்டமும் கிராம மக்களை இலக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென, சூரிய ஒளி மின் சக்தியில் இயங்கும் 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா பறக்கும் சாதனங்கள் மூலம், இணைய இணைப்பினை வழங்கும் திட்டத்தினை பேஸ்புக் செயல்படுத்த இருக்கிறது.

நூறு கோடி மக்களுக்கு மேல் மொபைல் போன் பயன்படுத்துபவர்களும், 47 கோடிக்கு மேல் இணையம் பயன்படுத்துபவர்களும் உள்ள இந்தியாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும், ஏற்பட இருக்கும் வர்த்தக வாய்ப்புகளில் பேஸ்புக் மற்றும் கூகுள் எப்படியாவது பெரும் பங்கினை மேற்கொள்ளத் திட்டமிடுகின்றன. 2020 ஆம் ஆண்டுக்குள், இந்தியாவில் 70 கோடிக்கும் அதிகமானவர்கள் இணையத்தைப் பயன் படுத்துவார்கள்.

அதற்கும் சற்று அதிகமான எண்ணிக்கையில் ஸ்மார்ட் போன் பயன்படுத்து பவர்களாக இருப்பார்கள் இவர்களில், பெரும் பாலானவர்கள், இணையத்தினைத் தங்கள் ஸ்மார்ட் போன் மூலம் அணுகுவார்கள். மொபைல் வழி டேட்டா பரிவர்த்தனையில், இவர்கள் 85% பங்கினை மேற்கொள்வார்கள்.

இவ்வளவு பெரிய அளவில் இணைய வழி வர்த்தகத்திற்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் இந்தியா தரும் சந்தர்ப்பங்களை எந்த ஓர் இணைய நிறுவனமும் விட்டு வைக்காது. பேஸ்புக்கின் புதிய பயனாளர்களின் எண்ணிக்கை, ஆசிய பசிபிக் நாடுகளில், குறிப்பாக இந்தியாவில் ஏற்பட்டு வருகிறது. எனவே, தனக்கு நல்ல வருமானத்தை இந்தியா தரும் என பேஸ்புக் கருதுகிறது. சீனாவிற்குப் பலமுறை பேஸ்புக் நிறுவனர் மார்க் சென்றும், இன்னும் வர்த்தக ரீதியாக எந்தவித முன்னேற்றத்தினையும் காண இயலவில்லை. எனவே, இந்தியாவில் தன் முழு கவனத்தையும் கொள்ள மார்க் முடிவெடுத்திருப்பதையே, பேஸ்புக் நிறுவனத்தின் இலவச வை பி இணைப்பு திட்டங்கள் காட்டுகின்றன.

Microsoft Office வேர்ட் டிப்ஸ்...

டேபிள் செல்லில் டெக்ஸ்ட்

வேர்ட் டாகுமெண்ட் ஒன்றைப் பல பக்கங்க ளுடன் தயாரித்திருப்போம். இதில் ஓரிரு டேபிள் களும் இருக்கும். இ று தி யி ல் தான் ஏதேனும் ஒரு டேபிளில் இன்னும் சில செ ா ற் க ளை ச் சேர்க்க வேண் டிய சூழ்நிலை ஏற்படும். அந்த செ ா ல் லை இ ணைக்கையில், டேபிள் கட்டம் நீண்டு, அனைத்து அமைப்பும் வீணாகும் நிலை ஏற்படலாம். டாகுமெண்ட் அல்லது டேபிள் சற்று கீழாக நீண்டு செல்லும் நிலை ஏற்ப டலாம். எனவே, செல்லில் டெக்ஸ்ட் அமைக் கையில், அது தானாக அதனுள்ளாகவே சரி செய் திடும் வகையில் இருந்தால், நமக்கு வசதியாக இருக்கும் அல்லவா? இதற்கான வழி ஒன்று வேர்ட் புரோகிராம் தருகிறது. அதனைப் பார்க் கலாம்.



1. நீங்கள் சற்று மாற்றி அமைக்க வேண்டிய நெட்டு வரிசை அல்லது வரிசைகளைத் தேர்ந் தெடுக்கவும்.
2. ரிப்பனில் Layout டேப்பினைத் தேர்ந்தெ டுக்கவும். இது நீங்கள் மேலே 1ல் சொல் லப்பட்ட செயலை மேற்கொண்டால் தான் கிடைக்கும்.
3. அடுத்து டேபிள் குரூப்பில் Properties டூல் தேர்ந்தெடுக்கவும். இப்போது வேர்ட் Table Properties என்ற டயலாக் பாக்ஸைக் காட்டும்.
4. இங்கு Cell டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும்.
5. இனி Options பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் Cell Options டயலாக் பாக்ஸைக் காட்டும்.
6. அடுத்து Fit Text என்னும் செக் பாக்ஸ் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும். இதில் டிக் அடை யாளம் ஏற்படுத்தவும்.
7. தொடர்ந்து இருமுறை ஓகே கிளிக் செய்திடவும். முதலில் Cell Options, அடுத்து Table Properties டயலாக் பாக்ஸ் மூடப் படும்.

இங்கு வேர்ட் எப்படி செயல்படுகிறது? செல்லில் உள்ள சொல்லின் எழுத்தளவைக் குறைத்துக் கொண்டு ஏற்கனவே வடிவமைத்த கட்டத்திற்குள்ளாக அமைக்கிறது. வேர்ட் டெக்ஸ்ட்டின் அகலத்தைக் குறைத்துக் கொள்கி றது. இதனை தொழில் நுட்ப ரீதியாக "scrunching" என்று சொல்வார்கள்.

இலக்கண, சொற்பிழை காட்டாதே

வேர்ட் புரோகிராமில், நாம் டெக்ஸ்ட் டைப் செய்திடும்போதே, அதில் உள்ள எழுத்து மற்றும் இலக்கணப் பிழைகளைச் சுட்டிக் காட்டும் வசதி தரப் பட்டுள்ளது. நாம் டைப் செய்கையில், இதனால், பிழை உள்ள சொற்களின் கீழாக, பச்சை மற்றும் சிகப்பு வண் ணங்களில் நெளி வான கோடுகள் காட்டப்படும். ஆனால், ஒரு சிலருக்கு இது எரிச்சலைத் தரும். மேலும், தமிழில் டெக்ஸ்ட் டைப் செய்கையில், அவற்றை ஆங்கிலச் சொற்களாக எடுத்துக் கொண்டு, அநேகமாக, பெரும்பாலான சொற்களில் இந்தக் கோடுகள் காட்டப்படும். எனவே, தமிழில் டைப் செய்து டெக்ஸ்ட் அமைப்பவர்களுக்கு, இந்த கோடுகள் அர்த்தமற்றவையாக இருக்கும். இந்த கோடுகள் காட்டப்படுவதை, வேர்ட் செயலி காட்டாமல் இருக்கும்படி அமைத்திடலாம். அதற்குக் கீழே தந்துள்ளபடி செயல்படவும்.

1. ஆபீஸ் பட்டன் அழுத்தி, Word Options டயலாக் பாக்ஸைத் திறக்கவும். நீங்கள் வேர்ட் 2010 பயன்படுத்துவதாக இருந்தால், ரிப்பனில் File டேப்பினை அழுத்தி, பின்னர் Options கிளிக் செய்திடவும்.
2. இந்த டயலாக் பாக்ஸின் இடது பக்கம் Proofing என்று இருப்பதில் கிளிக் செய்தி டவும்.
3. Mark Grammar Errors As You Type என்ற செக் பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தினை எடுத் துவிடவும்.
4. அடுத்து ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

இனி, சொல் மற்றும் இலக்கண பிழைகள் சுட்டிக் காட்டப்பட மாட்டாது.

Microsoft Excel Tips & Tricks
எக்ஸெல் டிப்ஸ்...

ஸ்ப்ரெட் ஷீட் தாவிச் செல்ல

எக்ஸெல் ஒர்க் புக் தயாரிப்பில், ஒரே நேரத்தில் பல ஒர்க் ஷீட்களைத் திறந்து வைத்து நாம் பயன்படுத்த விருப்பப்படுவோம். இதற்கென விண்டோவில் ஒவ்வொரு ஒர்க் ஷீட்டிற்கும் மாறுவதற்கு, கீழாக உள்ள டேப்பிற்கு மவுஸ் கர்சரைக் கொண்டு சென்று செயல்படுத்த வேண்டும். கீ போர்டினையே பயன்படுத்தும் பழக்கம் உள்ளவர்களுக்கு இது சற்று சிரமத்தைத் தரும். இதற்கான சுருக்கு வழி ஒன்று எக்ஸெல் ஒர்க் ஷீட்டில் தரப்பட்டுள்ளது. ஒர்க் ஷீட் மாற விருப்பப்படுகையில், Ctrl+F6 கீகளை அழுத்தவும். இந்த கீகளை அழுத்துகையில், ஒர்க் புக்குகளின் டேப்கள் வரிசையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதனைப் பார்க்கலாம். ஐந்து ஒர்க்புக்குகள் திறந்திருந்தால், ஐந்தாவது ஒர்க் ஷீட் செல்ல, ஐந்து முறை Ctrl+F6 கீகளை அழுத்த வேண்டும்.

எக்ஸெல் எழுத்தின் அளவு

மற்ற அப்ளிகேஷன் சாப்ட்வேர் போலவே, எக்ஸெல் தொகுப்பிலும் எழுத்தின் அளவு பாய்ண்ட் என்றே குறிப்பிடப்படுகிறது. ஒரு பாய்ண்ட் என்பது ஏறத்தாழ ஓர் அங்குலத்தில் 72ல் ஒரு பங்கு. ஒரு செல் அல்லது செல்லில் உள்ள தகவல் ஒன்றின் எழுத்தின் அளவினை மாற்ற வேண்டியதிருப்பின் நாம் டூல் பாரினைப் பயன்படுத்துகிறோம். டெக்ஸ்ட் சம்பந்தமான டூல்களுக்கு இடது பக்கம் (பாண்ட் டூலின் வலது பக்கம்) பாய்ண்ட் அளவின் பீல்டு கட்டம் உள்ளது. இந்த பீல்டின் வலது பக்கம் உள்ள கீழ் நோக்கிய அம்புக் குறியில் கிளிக் செய்தால் எழுத்தின் பாய்ண்ட் அளவுகள் பலவற்றைக் காணலாம். டெக்ஸ்ட்டைத் தேர்ந்தெடுத்துவிட்டு இந்த சைஸை மாற்றினால் எழுத்துக்களின் அளவு மாறி இருப்பதனைக் காணலாம்.

ஆனால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். கிளிக் செய்தால் கீழ் நோக்கி விரியும் அளவுகளில் மட்டுமே எழுத்தின் அளவை மாற்ற முடியும் என்பதல்ல. அளவு கட்டத்தில் சென்று எழுத்தின் அளவை கீ போர்டு வழியாக டைப் செய்து அமைக்க முடியும். எக்ஸெல் தொகுப்பினைப் பொறுத்தவரை 1 முதல் 409 புள்ளி வரை இதனை அமைக்க முடியும். (இது உங்கள் பிரிண்டரின் திறனைப் பொறுத்தது) முழு எண் அளவில் மட்டுமின்றி பாதி அளவிலும் இந்த எழுத்தின் அளவை அமைக்கலாம்.

ஹெடர் புட்டரில் கிராபிக்ஸ்

எக்ஸெல் ஒர்க்ஷீட் ஒன்றின் ஹெடர் மற்றும் புட்டரை (header and footer) வடிவமைக்கையில், எக்ஸெல் பலவகை சிறப்பு கூறுகளை அதில் அமைத்திட வழி தருகிறது. படங்களைக் கூட இவற்றில் இணைக்கலாம்.

1. முதலில் Insert டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும்.
2. இதில் Header & Footer என்ற டூலில் கிளிக் செய்திடவும். எக்ஸெல் ரிப்பனில் Design என்ற டேப்பினைக் காட்டுகிறது.
3. இங்கு, ஹெடர் அல்லது புட்டர், இவற்றில் எதில் நீங்கள் சிறப்பு கூறுகளை அமைக்க விரும்புகிறீர்கள் என்பதனைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கவும்.
4. உங்களுடைய கிராபிக் படம் எந்த இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ, அதற்கேற்ப, (left, center, or right) அப்பகுதியினைத் தேர்ந்தெடுக்கவும்.
5. தொடர்ந்து Header & Filter Elements குரூப்பில் உள்ள Picture டூலில் கிளிக் செய்திடவும். இப்போது எக்ஸெல், Insert Picture டயலாக் பாக்ஸைக் காட்டும்.
6. அடுத்து, டயலாக் பாக்ஸில் உள்ள கண்ட்ரோல் ஸ்விட்ச்களைப் பயன்படுத்தி, நீங்கள் அமைக்க விரும்பும் கிராபிக் பைலைத் தேர்ந்தெடுக்கவும்.
7. தொடர்ந்து Insert என்பதில் கிளிக் செய்திடவும். எக்ஸெல் தேர்ந்தெடுத்த கிராபிக் படத்தினை ஏற்கனவே தேர்ந்தெடுத்த இடத்தில் அமைக்கிறது.
8. இனி, ஹெடர் அல்லது புட்டரில், தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவும்.
9. ஹெடர் அல்லது புட்டரை விட்டு வெளியேறி, வெளியே கிளிக் செய்திடவும்.

இனி, ஹெடர் அல்லது புட்டரில், நீங்கள் அமைத்த கிராபிக் படம் நிலையாக இருக்கும். தேவை இல்லை எனில், இதே போல செயல்பட்டு, டயலாக் பாக்ஸில் தேவையான கண்ட்ரோல் தேர்ந்தெடுத்து நீக்கலாம்.

ஜியோனி எஸ்6எஸ் இந்தியாவில் அறிமுகம்

ஜியோனி நிறுவனம், இரு வாரங்களுக்கு முன், தன்னுடைய ஸ்மார்ட் போன் Gionee S6s ஐ விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது. இதன் அதிக பட்ச விலை ரூ. 17,999. இதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு.

இதன் திரை 1920 x 1080 பிக்ஸெல் அடர்த்தியுடன், 5.5 அங்குல அளவில், 2.5 டி அளவிலான வளைவான கிளாஸ் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு கார்னிங் கொரில்லா கிளாஸ் 3 பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. 1.3 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும், ஆக்டா கோர் Mediatek MT6753 ப்ராசசர், Mali T-720 ஜி.பி.யு.வுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் ராம் மெமரி 3 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி 32 ஜி.பி. இதனை மைக்ரோ எஸ்.டி. கார்ட் கொண்டு, 128 ஜி.பி. வரை உயர்த்திக் கொள்ளலாம். இதன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆண்ட்ராய்ட் 6.0 மார்ஷ்மலாய். இதனுடன் அமிகோ இன்டர்பேஸ் செயலியும் இயங்குகிறது.

இதில் இரண்டு சிம்களை இயக்கலாம். மைக்ரோ மற்றும் நானோ சிம்களைப் பயன்படுத்தலாம்.

பின்புறமாக, எல்.இ.டி. ப்ளாஷ் இணைந்த 13 எம்.பி. திறன் கொண்ட கேமரா தரப்பட்டுள்ளது. முன்புறமாக அதே ப்ளாஷ் கொண்ட 8 எம்.பி. திறன் கொண்ட கேமரா இயங்குகிறது. விரல் ரேகை சென்சார் உள்ளது. இதன் பரிமாணம் 154.5 x 75.6 x 8.27 மிமீ. நெட்வொர்க் இணைப்பிற்கு 4ஜி, வை பி, புளூடூத் 4.0 மற்றும் ஜி.பி.எஸ். ஆகிய தொழில் நுட்பங்கள் இயங்குகின்றன. இதன் பேட்டரி 3,150 mAh திறன் கொண்டதாக உள்ளது.

மூன்று வண்ணங்களில் இந்த மாடல் ஸ்மார்ட் போன் விற்பனைக்கு வந்துள்ளது. அமேஸான் டாட் இன் வர்த்தக தளத்திலும் மற்றும் அனைத்து மொபைல் போன் விற்பனைக் கடைகளிலும் கிடைக்கிறது.

மொபைல் டேட்டா கால நீட்டிப்பு

தொலை தொடர்பு சேவை நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி வரும் ட்ராய் அமைப்பு, மொபைல் இணைய டேட்டா திட்டங்களின் குறைந்த பட்ச கால அவகாசத்தினை ஓராண்டுக்கு [365 நாட்கள்] நீட்டிக்க அனுமதி அளித்துள்ளது. தற்போது, இந்த கால அவகாசம் 90 நாட்களாக உள்ளது. இதன் மூலம் முதன் முதலில் இணையம் பயன்படுத்துபவர்களும், எப்போதாவது ஒரு முறை, குறைந்த பட்ச செயல்பாடுகளுக்கே இணையத்தைப் பயன்படுத்துபவர்களும் பயன் பெறுவார்கள். இவர்கள் இதுவரை அதிகக் கட்டணம் செலுத்தி இணைய சேவை திட்டங்களை வாங்கியும், குறைவான பயன் பாட்டினால், கால அவகாசத்திற்குள்ளாக பயன் படுத்த முடியாததால், அனுமதிக்கப்பட்ட டேட்டா அளவினைப் பயன்படுத்த முடியாதவர்களாக இருந்தனர். இனி மேல், நிதானமாக, ஓராண்டு வரை தாங்கள் வாங்கிய இணைய டேட்டா கட்டணத் திட்டத்தினைப் பயன்படுத்தலாம்.

இனி இணைய சேவை வழங்கும் நிறுவனங்கள், ஸ்பெஷல் டாரிப் வவுச்சர்களை ஓராண்டு காலத்திற்கு பயன்படுத்தும்படி வழங்க முடியும். இந்த சலுகை டேட்டா மட்டுமே பயன்படுத்தும் இணைய இணைப்பிற்கு வழங்கப்படுகிறது.

செப்டம்பர் 5ல் அடுத்த ஆப்பிள் போன்

ஆப்பிள் நிறுவனத்தின், அடுத்த ஐபோன் 7 எப் போது வரும் என பல வதந்திகள் உலா வந்தன. தற்போது ஆப்பிள் இந்நிகழ் வுக்கான அழைப் பிதழ் ஒன்றை வழங்கி, புதிய ஐ போ ன் , வரும் செப் டம்பர் 7 அன்று வெ ளி யி ட ப் ப டு ம் என்று உறுதி செய்துள் ளது. சான் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள Bill Graham Civic Auditorium என்னும் அரங்கில் இந்த விழா காலை 10 மணி தொடங்கி நடைபெறும்.

ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7 ப்ளஸ் வெளியிடப்படலாம். அத்துடன் ஆப்பிள் வாட்ச் ஒன்றும் அறிமுகப்படுத்தப்படலாம். இதில் உள்ள கேமராக்கள் தரம் உயர்த்தப்பட்டு, டூயல் லென்ஸ் சிஸ்டத்துடன் கிடைக்கும் என உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின் றன. இரண்டு கேமராக்கள் இதில் இணைக் கப்படலாம். எதிர்பாராத வகையில், இதில் ஹெட்போன் ஜாக் இருக்காது என்ற வதந்தியும் உலா வருகிறது.

இதே நிகழ்வில், ஐ.ஓ.எஸ். 10 மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அரங்கேறலாம். சென்ற ஜூன் மாதம் வெளியிடப்பட்ட இந்த மொபைல் ஆப்பரேட்டிங் சிஸ்டம் இன்னும் புதுப்பிக்கப் படவில்லை. இந்த நிகழ்வில் இதன் புதுப்பிக் கப்பட்ட சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, பன்னாடெங்கும் பயன்படுத்தப்படும் ஆப்பிள் போன்களிலும் ஐபேட் சாதனங்களிலும் இந்த சிஸ்டம் இலவசமாக அப்டேட் செய்யப்ப டலாம்.

சென்ற 2015 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ஆப்பிள் வாட்ச் வெளியா னது. இதன் ஆப்பரேட்டிங் சிஸ்டமும் மேம்படுத்தப் பட வேண்டியுள்ளது. எனவே, புதிய வாட்ச் ஒன்று மேம்படுத் தப்பட்ட சிஸ் ட த் து டன் வெ ளி யா கலாம். இதில் ஜி.பி.எஸ். ட்ரேக்கிங் வசதி தரப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மொபைல் டிப்ஸ்

திரையில் உள்ள லிக்விட் கிறிஸ்டல் டிஸ்பிளே [LCD] மீது அழுத்தத்தைப் பிரயோகித்தால் திரை கெட்டுவிட வாய்ப்பு உள்ளது. எனவே பாக் கெட்டில் போனை வைத்திடுகையில் ஏதேனும் கூர்மையான அல்லது பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பொருள் மொபைல் போனுடன் உரசிக் கொண்டி ருக்கிறதா என்பதைக் கவனித்துச் செயல்படவும். போம் கவர்கள் அல்லது பிளாஸ்டிக் கவர்கள் இந்த வகையில் பாதுகாப்பு தரலாம்.

இந்தியாவில் எல்.ஜி.யின் எக்ஸ் கேம்

சென்ற பிப்ரவரியில் அறிவிக்கப்பட்ட, எல்.ஜி. நிறுவனத்தின் எக்ஸ் கேம் (X Cam) ஸ்மார்ட் போன், சென்ற வாரம், இந்தியாவில் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இதில் உள்ள கேமரா சில சிறப்பம்சங்களைக் கொண்டதாக உள்ளது. பின்புறக் கேமரா 13 எம்.பி. திறன் கொண்டது. 'வைட் ஆங்கிள் லென்ஸ்' இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் பாப் அவுட் படத்தில் இரண்டு போட்டோக்கள் கிடைக்கும். ஒன்று வழக்கமானதாகவும், இன்னொன்று வைட் ஆங்கிள் லென்ஸில் எடுக்கப்பட்டதாகவும் இருக்கும். இதன் மூலம், படமானது பிரேம் ஒன்றில் இருப்பது போன்ற காட்சி கிடைக்கும். Panorama View காட்சி தானாகவே அகலமான படம் ஒன்றை பதிவு செய்கிறது. மேலும், இதில் தரப்பட்டுள்ள Signature வசதி, போட்டோ எடுத்தபின்னர், அதில் தலைப்பு அல்லது பெயர் ஒன்றை இணைக்கும் செயல்பாட்டினை எளிதாக்குகிறது. இத்துடன் Geo-tagging, touch focus, face detection, ஆகிய வசதிகளும் தரப்பட்டுள்ளன. முன்புறமாகத் தரப்பட்டுள்ள கேமரா 8 மெகா பிக்ஸெல் திறன் கொண்டது.

இதன் மற்ற சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

இதன் பரிமாணம் 147.5 x 73.6 x 6.9 மிமீ. எடை 120 கிராம். இதில் இரண்டு நானோ சிம்களைப் பொருத்தலாம். இதன் திரை, 1080 x 1920 பிக்ஸெல் அடர்த்தியுடன் 5.2 அங்குல அளவில் உள்ளது. 1.14 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கக் கூடிய ஆக்டா கோர் ப்ராசசர் இயங்குகிறது. இதன் ராம் மெமரி 2 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி 16 ஜி.பி. இதனை 256 ஜி.பி. வரை அதிகப்படுத்தலாம். இதன் ஆப்பரேட்டிங் சிஸ்டம், ஆண்ட்ராய்ட் 6.0 மார்ஷ் மலாய்.

எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ்., இமெயில், புஷ் மெயில், இன்ஸ்டன்ட் மெசஞ்சர் ஆகிய வசதிகள் தரப்பட்டுள்ளன. போட்டோ வியூவர் மற்றும் டாகுமெண்ட் எடிட்டர் செயலிகள் இயங்குகின்றன.

நெட்வொர்க் இணைப்பிற்கு, 4ஜி, ஜி.பி.எஸ். வை பி, வை பி டைரக்ட், புளூடூத் 4.2., மைக்ரோ யு.எஸ்.பி. ஆகிய தொழில் நுட்பங்கள் இயங்குகின்றன. Accelerometer, gyro, proximity, compass ஆகிய சென்சார்கள் இயங்குகின்றன.

இதில் வெளியே எடுக்க முடியாத லித்தியம் அயன் பேட்டரி 2500 mAh திறனுடன் தரப்பட்டுள்ளது. 260 மணி நேரம் தன் மின் சக்தியைத் தங்க வைக்கிறது. தொடர்ந்து 6 மணி நேரம் பேசலாம். சில்வர் வண்ணத்தில் இந்த ஸ்மார்ட் போன் கிடைக்கிறது.

இதன் அதிகபட்ச விலை ரூ. 19,990.

மொபைல் டிப்ஸ்

போனில் சிக்னல்கள் எந்த அளவில் பெறப்படுகின்றன என்பதைக் காட்டும் இன்டிகேட்டர் அனைத்து போன்களிலும் இருக்கும். இது குறைவாக இருக்கும்போது ரேடியேஷன் என்னும் கதிர்வீச்சு அதிகமாக இருக்கும். சரியாக இருக்கும் போது மிதமாக இருக்கும். மேலும் குறைவாக இருக்கையில் மின் சக்தியும் அதிகம் செலவழிக்கப்படும். எனவே சிக்னல் ரிசப்ஷன் குறைவாக இருக்கும் இடத்தில் இருந்து பேசுவதனைத் தடுக்கவும்.

விண்டோஸ் 10 சிஸ்டத்தில், Recently Used Files நீக்கம் குறித்து நீங்கள் அளித்துள்ள பதிலில் தரப் பட்டுள்ள தெளிவான விளக்கம், அதைக் காட்டிலும் அதனை விளக்கும் படம் மிக அருமை. நீங்கள் எவ்வ ளவு சிரத்தை எடுத்து, எங்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறீர்கள் என்பதை எண்ணுகையில் பெருமையாக உள்ளது. மிக மிக நன்றி.

எஸ். பிலோமினா, வேலூர்.

இந்தியாவின் சாப்ட்வேர் வல்லுநர்கள், குறிப்பாக தமிழக வல்லுநர்கள், இன்று உலகம் முழுவதும், தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டிருந்தாலும், இந்தியா, இணையப் பயன்பாட்டில் இன்னும் முழுமை அடையவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம், மக்களிடையே ஏற்பட்டுள்ள டிஜிட்டல் இடைவெளிதான். இதனை நீக்க நம் அரசும், சமு தாய ஆர்வலர்களும் பாடுபட வேண்டும்.

டாக்டர் ஜெ. ராஜ்குமார், தூத்துக்குடி.

"விளையாட்டு வினையாகும்" என்று நம்ம ஊர் பழ மொழி உண்டு. போக்கமான் கோ என்ற விளை யாட்டு இந்தப் பழமொழிக்கேற்ற விளையாட்டு என்று முடிவு செய்திடும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள் ளது. போனைத் தூக்கிக் கொண்டு, சாலைகளிலும், பூங்காக்களிலும் நடந்து சென்று விளையாடினால், ஏற்படும் விபத்துகளுக்கு யார் பொறுப்பேற்பது? ஏன் இந்த விபரீதம்? சில நாடுகளைப் போலவே இந்த விளையாட்டு இங்கும் தடை செய்யப்பட வேண்டும். சமூக ஆர்வலர்கள் இதற்கு முக்கியத்துவம் அளித்து தடை ஏற்படுத்த முயல வேண்டும்.

பேரா டாக்டர் இரா. செந்தில்நாதன், மதுரை.

புதிய எமோஜி படங்கள் வேடிக்கையாகவும், பயன் படுத்த உதவியாயும் உள்ளன. இனி, இவை மக் களின் மனங்களில், புதிய இடங்களைப் பெறும்.

ஆர். சீதாராமன், கும்பகோணம்.

விண்டோஸ் மூவி மேக்கர் செயலியை நீங்கள் குறிப் பிட்டபடி தரவிறக்கம் செய்து இயக்கினேன். மிகவும் நன்றாக இயங்குகிறது. குறிப்பாக அதன் இடை முகம் மிக அருமை. தகவலுக்கு நன்றி.

ஆர். சியாமளா, சென்னை.

இணையப் பயனாளர்களில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றுள்ளதா? நம்பவே முடியவில்லையே. அப்படியானால், இன்னும் வேகமாக இணையப் பயிற் சியை கிராமப் புற மக்களுக்குக் கொண்டு சென்றால், இந்தியாவிற்கே நாம் தான் முன்னோடிகளாக இருப்போம். இதனை அரசு உணர்ந்து செயல்படுமா?

எஸ். கமாலுதீன், தேவாரம்.

எமோஜிக்களைப் பயன்படுத்தக் கூட, இணை யத்தின் உயர் அமைப்பு ஒன்றின் அனுமதியைப் பெற வேண்டியதுள்ளது என்ற தகவலைப் படிக்கையில் வியப்பாகவும், அதே நேரத்தில், இணைய நிர்வாகக் கட்டமைப்பு மிகச் சிறப்பாக உள்ளது என்று மகிழ்ச்சி யாகவும் இருந்தது. தகவலுக்கு நன்றி.

என். பகவத் சிங், திருமங்கலம்.

புதிய ஆண்ட்ராட்ய் சிஸ்டம் தர இருக்கும் புதிய வச திகளைப் பட்டியல் இட்டது, பயனாளர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. எப் போது பொது மக்களுக்குக் கிடைக்கும் என எதிர் பார்த்துக் காத்திருக்கிறோம்.

என். சுகவனம், திருப்பராய்த்துறை.

இணையத்தோடு நமக்குச் சில ஆண்டுகளே பழக்கம் என்றாலும், கடந்த 25 ஆண்டுகளாக, மனித வாழ்க்கையோடு ஒன்றி, அதற்கென பல பரி மாணங்களை இணையம் தந்துள்ளது. இந்த நெடிய செயல்பாட்டின் முக்கிய மாற்றங்களை, எளிமையாக "இணைய வெள்ளிவிழா" கட்டுரையில் தந்தது மிகச் சிறப்பாக இருந்தது.

பேரா. இல. செல்லப்பன், காரைக்குடி.

கேள்வி – பதில்

– டாக்டர் பெ. சந்திர போஸ் –

கேள்வி: ***விண்டோஸ் 7 சிஸ்டத்திலிருந்து, விண்டோஸ் 10க்கு மாறினேன். மாறிய பின்னர், என் யாஹூ மெயில் பக்கத்தில், நிறைய விளம்பரங்கள் வருகின்றன. முன்பு இது போல் வந்ததில்லை. விண்டோஸ் 10 தான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். இதனை எப்படி சரி செய்திடலாம்?***

எஸ். நிரஞ்சன், தாராபுரம்.

பதில்: விண்டோஸ் 10 உங்கள் யாஹூ மெயில், ஜிமெயில், அவுட்லுக் டாட் காம் போன்றவற்றில் எந்த மாற்றமும் செய்திடவில்லை. நீங்கள் கூறியிருப்பது போல, விளம்பரங்கள் வருவது, ஒரு வேளை பிரவுசர் மாற்றத்தால் ஏற்பட்டிருக்கலாம். நீங்கள் ஏற்கனவே பயன்படுத்திய பிரவுசரை விட்டுவிட்டு எட்ஜ் பிரவுசரைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். இதற்கு முன் பயன்படுத்திய பிரவுசர், விளம்பரங்களைத் தடுக்கும் Ad Block எக்ஸ்டன்ஷன் புரோகிராமினை இன்ஸ்டால் செய்யப்பட்டு இயங்கியிருக்கும். தற்போது பயன்படுத்தும் பிரவுசரில் அது இல்லை என்றால், நிச்சயம் விளம்பரங்கள் காட்டப்படும். அவற்றை நீங்கள் விரும்பவில்லை என்றால், அந்த பிரவுசருக்கான Ad Block எக்ஸ்டன்ஷன் புரோகிராமினை இன்ஸ்டால் செய்திடலாம். அல்லது ஏற்கனவே பயன்படுத்திய பிரவுசரில் பதிக்கப்பட்டிருந்த இந்த எக்ஸ்டன்ஷன் புரோகிராமினை நீங்கள் நீக்கியிருக்கலாம். ஏனென்றால், வணிக ரீதியான சில இணைய தளங்கள், நாம் விளம்பரங்களைத் தடுக்கும் இந்த வகை புரோகிராம்களை நீக்கினால் தான், பக்கங்களைக் காட்டுவேன் என அடம் பிடிக்கும். அதற்கான ஒரு லிங்க் கொடுக்கும். அதில் கிளிக் செய்தால், தானே அந்த புரோகிராமினை நீக்கிவிடும். அது போன்ற ஒரு தருணத்தில் நீங்களே நீக்கி இருக்கலாம். எனவே, மீண்டும் "அட் பிளாக்" செயலியை நிறுவி விட்டால், விளம்பரங்கள் வராது.

கேள்வி: வேர்டில் அமைக்கப்பட்ட டாகுமெண்ட்டில், டெக்ஸ்ட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களை, அனைத்தும் சிறிய மற்றும் பெரிய எழுத்துக்களில் அமைக்க, ரிப்பனில் எதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? அது போன்ற அமைப்பு உள்ளதா?

இல. சஞ்சீவி பழனியப்பன், பள்ளத்தூர்.

பதில்: முதலில், டாகுமெண்ட்டில், மாற்றப்பட வேண்டிய சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். பின்னர், ரிப்பனில் ஹோம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கே, Font என்ற பிரிவில், Aa என்று இருப்பதில் உள்ள சிறிய அம்புக் குறியில் கிளிக் செய்திடவும். கீழாக மெனு ஒன்று கிடைக்கும். இதில் Sentence Case, lower case, UPPER CASE, Capitalize each word, TOGGLE CASE, எனப் பிரிவுகள் காட்டப்படும். நீங்கள் தேர்ந்தெடுத்த சொற்கள் எப்படி



மாற்றப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ, அதற்கான பிரிவில் கிளிக் செய்தால், அதன்படி மாற்றப்படும்.

இதனை இன்னொரு வழியாக கீ போர்ட் வழியாகவும் மேற்கொள்ளலாம். டெக்ஸ்ட் தேர்ந்தெடுத்த பின்னர், Alt+H அழுத்தினால், ஹோம் டேப் இயக்கப்படும். அதன் பின்னர், "7" ஐ அழுத்தவும். இங்கு மேலே காட்டப்பட்ட ஆப்ஷன்கள் கிடைக்கும். இதில் எழுத்துகள் காட்டப்படும். அவை "S" for Sentence case, "l" (a lowercase L) for lowercase, "U" for UPPERCASE, "C" for Capitalize Each Word, or "t" for tOGGLE CASE என இருக்கும். நமக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுக்கலாம்.

இன்னோரு டிப்ஸ் தரட்டுமா! சொற்களைத் தேர்ந்தெடுத்து ஷிப்ட்+F3 கீகளை அழுத்தினால், lower case, UPPER CASE மற்றும் Sentence Case என மாறிவரும். உங்களுக்குத் தேவையானது கிடைத்தவுடன், கீகளை விட்டுவிடலாம்.

கேள்வி: வேர்டில் டாகுமெண்ட்களை உருவாக்குகையில், சில சொற்களை வலது ஓரத்தில் அமைக்கையில், அவை அடுத்த வரியில் பிரிந்து நிற்கின்றன. இவற்றிற்கு ஹைபன் என்னும் இடைக்கோடு பயன்படுத்துகிறேன். ஆனால், மீண்டும் எடிட் செய்கையில், இந்த சொல் உள்ளாக முழுமையாக வந்தாலும், நான் கொடுத்த ஹைபன் இடம் பெறுகிறது. இது பார்க்க, படிக்கச் சரியாக இல்லை. இதனைக் கண்டறிந்து எப்படி சரி செய்வது?

கா. சத்தீஷ் குமார், தென்காசி.

பதில்: நாமாகக் கொடுக்கும் ஹைபன் இது போல டாகுமெண்ட்டை எடிட் செய்த பின்னர் தேவையற்ற இடத்தில் அமர்ந்து கொண்டு டாகுமெண்ட் அழகைக் கெடுக்கும். இதற்காக, வேர்ட் optional hyphen என்ற ஒன்றைக் கொண்டுள்ளது. இது ஒரு ஸ்பெஷல் கேரக்டர். இதனை டாகுமெண்ட்டில், தேவைப்படும் இடத்தில் நீங்கள் அமைக்கலாம். ஹைபன் அமைத்த சொல், எடிட் செய்த பின்னர், முழுமையாக ஒரு வரிக்குள்ளாகவே அமையும் பட்சத்தில், இந்த optional hyphen எடுக்கப்பட்டு விடும். டாகுமெண்ட்டில் ஹைபன் தேவையற்ற ஒன்றாக அமையாது. Optional hyphen உருவாக்க கண்ட்ரோல் + ஹைபன் (Ctrl+- (Ctrl and the hyphen or dash key)) கீகளை அழுத்த வேண்டும். இந்த வகை ஹைபன், டாகுமெண்ட் ஓரத்தில் அமர்ந்தால் ஒழிய, காட்டப்பட மாட்டாது. ஆனால், இந்த Optional Hyphen எங்கெல்லாம் அமைக்கப்பட்டுள்ளது என்று பார்க்க வேண்டுமானால், கீழ்க்காணும் அமைப்பு வழிகளை இயக்கி வைக்கவும்.

1. வேர்ட் ஆப்ஷன்ஸ் டயலாக் பாக்ஸைத் திறக்கவும். வேர்ட் 2007ல், ஆபீஸ் பட்டன் அழுத்தி, கீழாகக் கிடைக்கும் Word Options பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் 2010 எனில், ரிப்பனில் File டேப் அழுத்தி, பின்னர் Word Options என்பதில் கிளிக் செய்திடவும்.
2. டயலாக் பாக்ஸின் இடது பக்கம் உள்ள Display என்பதில் கிளிக் செய்திடவும்.
3. இங்கு கீழ் பகுதியில் உள்ள Optional Hyphens என்பதற்கு அருகே உள்ள பாக்ஸில் டிக் செய்திடவும்.
4. அடுத்து ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.



கேள்வி: நான் குரோம் பிரவுசரைப் பயன்படுத்தி வருகிறேன். என் சிஸ்டம் விண்டோஸ் 10. இந்த பிரவுசரில் நான் பார்க்கும் வெப்சைட் விபரங்களைப் பதிவு செய்திடாமல் இருக்க எங்கு எந்த செட்டிங் அமைக்க வேண்டும். இன் காக்னிடோ இயக்காமல் வேறு செட்டிங் வழி உள்ளதா? என்னைப் பற்றிய டேட்டா கூகுள் நிறுவனத்திற்கு குரோம் அனுப்பக் கூடாது. இதுவே என் நோக்கம்.

த. கமலேஸ்வரன், திருப்பூர்.

பதில்: தாராளமாக இந்த தடையை விதிக்கலாம். இதற்கு Do Not Track என்ற ஆப்ஷனை இயக்க வேண்டும். பிரவுசரின் வலது மேல் மூலையில் உள்ள மெனு பட்டனில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Settings என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இந்தப் பக்கத்தின் கீழாகச் சென்று "Show advanced settings" என்பதைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். Privacy என்பதன் கீழ், Send a 'Do Not Track' request with your browsing traffic என்று இருக்கும் இடத்தில் உள்ள பாக்ஸில் டிக் அடையாளத்தினை அமைக்கவும். சேவ் செய்து வெளியேறவும். இனி நீங்கள் பார்க்கும் தளங்கள், தேடும் விஷயங்கள் குறித்த தகவல்கள் கூகுள் சர்வருக்கு அனுப்பப்பட மாட்டாது.

கேள்வி: என் பெர்சனல் கம்ப்யூட்டரில் பேஸ்புக் பயன்படுத்தி வருகிறேன். கடந்த ஒரு வாரமாக, என் பக்கத்தில் சென்று, Friends ***என்ற பிரிவிற்குச் சென்றாலும், நண்பர்களின் பிறந்த நாள் குறித்த பிரிவு கிடைக்கவில்லை. எனக்கு பிறந்த நாள் குறித்த நோட்டிபிகேஷனும் கிடைக்கவில்லை. இதனை எப்படி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவது?***

எம். மகாலிங்கம், சிவகாசி.

பதில்: ஒரு சில வாசகர்கள் இது பற்றி குறை கூறி கடிதங்களை அனுப்பியுள்ளனர். பலருக்கு இந்த பிரச்னை ஏற்படவில்லை. நீங்கள் இது குறித்து https://www.facebook.com/help/326603310765065/ என்ற முகவரியில் உங்கள் குறையைப் பதிவு செய்திடலாம். பதில் அனுப்பப்படும். அல்லது பிரச்னை என்னவென அறியப்பட்டு தீர்க்கப்படும். அல்லது பேஸ்புக்கில் உங்கள் தளத்தில் நுழைந்த பின்னர், https://www.facebook.com/events/birthdays என்ற முகவரியினை டேப் ஒன்றில் அமைத்துத் தேடவும். நிச்சயம் கிடைக்கும்.

கேள்வி: கூகுள் நிறுவனம் இலவசமாக பிரவுசர் தருவதன் மூலம், நம்மைப் பற்றிய தகவல்களை எடுத்துக் கொள்கிறது என்று பலர் குற்றம் சாட்டும் வகையில் கூறுகிறார்களே. நம்மிடம் இருந்து பெற்ற தகவல்களை வைத்துக் கொண்டு கூகுள் அப்படி என்னதான் செய்கிறது?

என். சரண்யா, நெய்வேலி.

பதில்: இது குறித்துச் சிறிய கட்டுரை எழுதலாமா என்று எண்ணிக் கொண்டிருந்த போது, உங்களின் நியாயமான கடிதம் வந்துள்ளது. இங்கேயே அது குறித்துச் சுருக்கமாக விளக்கம் தருகிறேன்.

கூகுள் இலவச சேவைகள் தந்து அவற்றைப் பயன்படுத்தும் பயனாளர்களிடமிருந்து தகவல்களைத் திரட்டுகிறது. அவற்றை விளம்பரதாரர்களுக்கு வகைப்படுத்தி வழங்கி, விற்பனை செய்து, பல கோடி டாலர்களை வருமானமாக ஈட்டுகிறது. இவ்வளவு எளிமையாக சொன்னால் எப்படி என்கிறீர்களா? மேலே குறிப்பிட்ட செயல்பாட்டினை பல நிலைகளாகப் பார்க்கலாம்.

கூகுளின் விளம்பரங்கள் (Google Ads) பயன்படுத்தப்படும் இணைய தளங்களை நீங்கள் பார்க்கும் போது, அவற்றில் காட்டப்படும் பொருட்கள் அல்லது சாதனங்களை நீங்கள் பயன்படுத்தினால், உங்கள் பிரவுசர், அந்த இணையப் பக்கத்தின் முகவரியை, உங்களின் ஐ.பி. முகவரி மற்றும் பிற தகவல்களை கூகுள் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கும். உங்கள் கம்ப்யூட்டரில் இது சார்ந்த குக்கிகள் பிரவுசரால் பதியப்படும். அல்லது ஏற்கனவே இந்த குக்கிகள் இருந்தால், அவற்றைப் படிக்கும். நீங்கள் அப்ளிகேஷன் ஒன்றைப் பயன்படுத்தும்போது, அந்த அப்ளிகேஷன் பெயர் அனுப்பப்படும். அத்துடன், மற்ற தளங்களில் எந்த அப்ளிகேஷன்கள் உங்களுக்குக் காட்டப்பட்டன் என்ற தகவலும் செல்லும். சரி, இந்த தகவல்களைக் கொண்டு கூகுள் என்ன செய்கிறது?

விளம்பரங்களை இன்னும் சிறப்பாக அமைக்கிறது. விளம்பரங்கள் எப்படி செயல்படுகின்றன என்று அறிக்கை தயாரிக்கப்பட்டு விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பரங்களைக் கொண்டுள்ள இணையதளங்களுக்கு அனுப்புகிறது. இணைய தளங்களில் பதிப்பவர்களுக்கு பணம் அனுப்புகிறது. Google Analytics மூலம் இந்த தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டு, இணைய தளங்களைப் பார்ப்பவர்களின் நாட்டம் எதில் உள்ளது என்று அறிவிக்கிறது. ஏமாற்றுபவர்களைக் கண்டறிந்து, பயனாளர்களையும் விளம்பரதாரர்களையும் பாதுகாக்கிறது.

கேள்வி: எக்ஸ்டர்னல் 3.5" பிளாப்பி ட்ரைவ் ஒன்றை யு.எஸ்.பி.போர்ட்டில் இணைத்து பயன்படுத்தி வந்தேன். இப்போது என் கம்ப்யூட்டரை விண்டோஸ் 10க்கு அப்டேட் செய்துவிட்டேன். இதில் பிளாப்பி வேலை செய்திடுமா? பயன்படுத்தினால், ஏதேனும் பிரச்னை வரும் என்று இதுவரை பயன்படுத்தவில்லை. பயன்படுத்த என்ன செய்திட வேண்டும் என அறிவுரை தரவும்.

என். நார்மன், நாகர்கோவில்.

பதில்: விண்டோஸ் 10 சிஸ்டத்தின் கொண்டு வரப்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றம், அதில் பிளாப்பி ட்ரைவ் இயங்குவதற்கான வழி முறைகள் (ட்ரைவர்கள்) தரப்படாதது தான். இது குறித்து, விண்டோஸ் 10 சோதனைப் பதிப்பாக இருந்த போதே, கம்ப்யூட்டர் மலரில் எழுதி இருந்தோம். இதற்கான வழி, நீங்கள் பயன்படுத்தும் எக்ஸ்டர்னல் ட்ரைவ் தயாரித்த நிறுவனத்திடம் உள்ளது. அந்த நிறுவனத்தின் இணைய தளப் பக்கம் சென்று, இந்த பிளாப்பி ட்ரைவ் சாதனம் விண்டோஸ் 10 சிஸ்டத்தில் இயங்க ட்ரைவர் பைலைத் தயார் செய்து, இணைய தளத்தில் பதிந்து வைத்துள்ளதா எனப் பார்க்கவும். இருந்தால், அதனை டவுண்லோட் செய்து, இன்ஸ்டால் செய்து, பின்னர் இயக்கிப் பார்க்கவும். இல்லையேல், வேறு வழி இல்லை. பயன்படுத்துவதை மறந்து விடவும்.

கேள்வி–பதில்